செய்தி வெளியீடு எண் : 1305 நாள் : 02.08.2022

# செய்தி வெளியீடு

## வணிகவரி மற்றும் பதிவுத்துறைகள் வருவாய் ஈட்டுதலில் தொடர்ந்து சாதனை – மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு பி.மூர்த்தி அவர்கள் பெருமிதம்

"வணிகவரித்துறை கடந்த ஜூலை, 2022 மாதத்தில் ஈட்டிய வரிவருவாய் ரூ.9,557.00 கோடியாகும். இது சென்ற 2021–2022 நிதியாண்டில், ஜூலை, 2021 மாதத்தில் ஈட்டிய வருவாயான ரூ.6,674.00 கோடியை விட ரூ.2,883.00 கோடி அதிகமாகும். நடப்பு 2022–2023 நிதியாண்டில் 31.7.2022 வரை (4 மாதங்களில் மட்டும்) வணிகவரித்துறை ரூ.47,056.00 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. இந்த வரிவருவாய் கடந்த 2021–2022 நிதியாண்டில் இதே காலத்தில், அதாவது 31.7.2021 வரை ஈட்டப்பட்ட வருவாயான ரூ.28,439.00 கோடியை விட, ரூ.18,617.00 கோடி அதிகமாகும். இதில் எட்டப்பட்டுள்ள வளர்ச்சி விகிதம் 65.46 % ஆகும்.

மண்டலங்கள் தோறும் நடத்தப்படும் ஆய்வுக் கூட்டங்களில், வரி ஏய்ப்பைத் தடுத்து அரசுக்கு முறையாக வந்து சேர வேண்டிய வரி வருவாய் விடுதலின்றி வசூலிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு வருகிறது. துறையின் அலுவலர்கள் முழு ஈடுபாட்டுடன் செயலாற்றி இந்த சாதனை வருவாயை ஈட்ட உறுதுணையாய் இருந்தனர் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

இதனைப் போன்றே, பதிவுத்துறையில் ஜூலை 2022 மாதத்தில் வசூலிக்கப்பட்ட மொத்த வருவாய் ரூ.1,342.01 கோடி ஆகும். கடந்த 2021 வருட ஜூலை மாதத்தில் வசூலிக்கப்பட்ட ரூ.1,242.22 கோடியை விட இது ரூ.99.79 கோடி அதிகமாகும். நடப்பு 2022–2023 நிதியாண்டில், ஜூலை, 2022 மாதம் வரை பதிவுத்துறையில் ஈட்டப்பட்ட வருவாய் ரூ.5718.90 கோடி ஆகும். இது கடந்த 2021–2022 நிதியாண்டில் இதே காலத்தில், அதாவது, ஜூலை, 2021 வரை ஈட்டப்பட்ட வருவாயான ரூ.3,342.87 கோடியை விட ரூ.2,376.03 கோடி அதிகமாகும். இவ்வகையில் பதிவுத்துறையிலும் வளர்ச்சி விகிதம் 71.07% என்ற அளவில் உயர்ந்துள்ளது என்பதை பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

பதிவுத்துறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளாலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வு நடவடிக்கைகளாலும் இந்த சாதனை எய்தப்பட்டுள்ளது.

அரசுக்கு பெருமளவில் வருவாய் ஈட்டித்தரும் இவ்விரு துறைகளும் தொடர்ந்து இதே போல் செயல்படும் என்ற நம்பிக்கை உள்ளது"

என வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in